இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 287 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 14 – புதன்கிழமை 28 மே 2025 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 287 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 14 - Wednesday 28 May 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் உயர்கல்வி தொடர்ந்து மேம்படுத்தப்படுகிறது!

# 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.5.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், கடலூர் மாவட்டம் – பண்ருட்டி, நீலகிரி மாவட்டம் – குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், சென்னை மாவட்டம் – ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் – செய்யூர், சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம் – கொளக்காநத்தம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் (தொழில்நுட்ப பிரிவு) வெ. சுகுமாரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**சென்னை, மே 28-**

**2025-26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.5.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், கடலூர் மாவட்டம் பண்ருட்டி, நீலகிரி மாவட்டம் குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சென்னை மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடை மருதூர், பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி களை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

### இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடம்!

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர் கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர் கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

ஏழை எளிய கிராமப்புற மாணவ, மாணவியர்களின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, 2025-26ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை யில், நீலகிரி மாவட்டம் குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் நத்தம், சென்னை மாவட்டம் ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும், கடலூரில் 21.2.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடலூர் மாவட்டம் - பண்ருட்டியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### ரூ.25 கோடியே 27 லட்சம் ஒதுக்கீடு!

இப்புதிய கல்லூரிகள் ஒவ்வொன்றும் தலா 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்படும். மேலும், ஒவ்வொரு கல்லூரிக்கும் 12 ஆசிரியர்கள் (உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் முதலாமாண்டிற்கு மட்டும்) மற்றும் 14 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் வீதம் 11 கல்லூரிகளுக்கு மொத்தம் 132 ஆசிரியர்கள் மற்றும் 154 ஆசிரியரல்லாப் பணியிடங்களைத் தோற்றுவித்து, 11 கல்லூரிகளுக்கு ஓராண்டுக்கான தொடர் மற்றும் தொடராச் செலவினத்திற்காக மொத்தம் 25 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு கல்லூரிக்கும் 5 பாடப்பிரிவுகளில் ஓராண்டுக்கு 3050 மாணவர்கள் வீதம் 3 ஆண்டுகளுக்கு 9150 மாணவர்கள் பயன் பெறுவர்.**

### 176 அரசு கல்லூரிகள்!

முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்ட இப்புதிய 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சேர்த்து, தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் அரசுகளின் எண்ணிக்கை 176 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா,


தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ஜூன் 19: தமிழ்நாட்டில் மாநிலங்களவைத் தேர்தல்!

### இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

**புதுடெல்லி, மே 28-**

**தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்வு செய்யப்பட்ட 6 உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடையவுள்ள நிலையில், வருகின்ற ஜூன் 19 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.**




மாநிலங்களவை உறுப்பினர்கள் பா.ம.க.வின் அன்புமணி ராமதாஸ், தி.மு.க.வின் எம். சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், அ.தி.மு.க.வின் என்.சந்திரசேகரன், ம.தி.மு.க.வின் வைகோ ஆகியோரின் பதவிக் காலம் வருகின்ற ஜூலை 24 ஆம் தேதியுடன் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில், 6 மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் வருகின்ற ஜூன் 19 ஆம் தேதி நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஜூன் 9 ஆம் தேதி வேட்பு மனுத் தாக்கல் தொடங்கும் என்றும், வேட்புமனுவைத் திரும்பப் பெற ஜூன் 12 கடைசி நாள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை பதவிக்கு போட்டி நடைபெறும் பட்சத்தில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 19 மாலை 5 மணிக்கு எண்ணி முடிவு அறிவிக்கப்படும். என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதே போல், அஸ்ஸாம் மாநிலத்தில் காலியாகவுள்ள இரண்டு மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளுக்கு தமிழ்நாட்டுடன் தேர்தல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து பாராமுகம்!

## கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது!

### "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆங்கில நாளேடு சிறப்புக் கட்டுரை!

**சென்னை, மே 28-**

**கல்விக்கான நிதியை ஒதுக்கீடு செய்வதில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருவதை "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" சிறப்புக் கட்டுரை அம்பலப்படுத்தி உள்ளது.**

மாநிலங்களுக்கு நிதி அளிக்கும் ஒன்றிய அரசின் சமக்ர சிக்ஷா திட்டம் குறித்து கட்டுரை ஒன்றை "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" வெளியிட்டுள்ளது. அதில், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு கல்வி அமைச்சகத்தின் திட்ட ஒப்புதல் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட புதிய நிதி ஒதுக்கீடு 2024-25 ஆம் ஆண்டில் 4ஆயிரத்து 150 கோடி ரூபாயாக இருந்ததாகவும் நடப்பு நிதியாண்டில் இது 2ஆயிரத்து 734 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2024-25 நிதியாண்டில் 4ஆயிரத்து 579 கோடி அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கோரியிருந்த நிலையில், நடப்பு நிதியாண்டில் 3 ஆயிரத்து 104 கோடி ரூபாயாக தனது கோரிக்கையை தமிழ்நாடு அரசு குறைத்துக் கொண்டதாகவும், ஒன்றிய அரசு நிதியுதவி அளிக்கும் இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில், நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி மிகக் குறைவு என்றும், இத்திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசு 60 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம் நிதியை செலவிடுவதாகவும் அக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


Dip in SS fund earmarked for TN in 2025-26

### உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் தரவுகளின்படி, பீகார், டெல்லி, கர்நாடகா, கேரளா, பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்கு நடப்பு நிதியாண்டில் சமக்ர சிக்ஷா திட்டத்திற்கான நிதி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு, தெலங்கானா, ஹரியானா, ஜார்கண்ட், உத்தரகண்ட், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 202425 ஆம் ஆண்டிற்கான சமக்ர சிக்ஷா நிதியில் ஒன்றிய அரசின் பங்களிப்பு முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்து போராடி வருவதாகவும், இத்திட்டத்திற்கான நிலுவைத் தொகையாக உள்ள 2 ஆயிரத்து 152 கோடி ரூபாயை விடு விக்க உத்தரவிடக்கோ ரி ஒன்றிய அரசுக்கு எதிராக மாநில அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதையும் இக்கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமக்ரசிக்ஷா திட்டத்திற்கான 2ஆயிரத்து 152 கோடி ரூபாயை நிலுவைத் தொகையையும், நடப்பாண்டு அளிக்க வேண்டிய 2 ஆரியத்து 734 கோடி ரூபாயையும் விடுவிக்க வேண்டும் எனக் கோரியதாயவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கல்விக்கான நிதியை ஒதுக்கீடு செய்வதில் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருவதால், கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் பயிலும் மாணவர்களுக்காக தனியார் பள்ளிகளுக்கு அளிக்க வேண்டிய கட்டணத்தை செலுத்துவதில் மாநில அரசுக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிகர அந்நிய நேரடி முதலீடு சரிவு!

## இந்தியாவை விட்டு முதலீட்டாளர்கள் வெளியேறுகின்றனர்!

### காங். குற்றச்சாட்டு !

*புதுடெல்லி, மே 28-*

*'நிகர அந்நிய நேரடி முதலீடு சரிவு, நாட்டில் மிகப் பெரிய முதலீட்டு நிச்சயமற்ற தன்மையை பிரதிபலிக்கிறது' என காங்கிரஸ் குற்றம்சாட்டி உள்ளது. ரிசர்வ் வங்கி கடந்த மே மாதத்திற்கான மாதாந்திர அறிக்கையில், 2024-25ம் ஆண்டில் இந்தியாவில் நிகர அந்நிய நேரடி முதலீடு வரவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 96 சதவீதம் குறைந்துள்ளதாகவும், 0.4 பில்லியன் டாலர்களாக (ரூ.3,400 கோடி) குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டில் நிகர அந்நிய நேரடி முதலீடு 10.1 பில்லியன் டாலராக (ரூ.85,850 கோடி) இருந்தது. கடந்த 10 ஆண்டில் இல்லாத அளவுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய சந்தையில் இருந்து தங்கள் பணத்தை வெளியில் எடுத்துள்ளன.*

*இதுகுறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பதிவில், "இந்த திடீர் வீழ்ச்சி குறித்து அதிகாரப்பூர்வ விளக்கத்தை மறைக்க வெள்ளையடிக்கும் செயல்கள் எதுவாக இருந்தாலும், இது இந்தியாவில் மிகப் பெரிய முதலீட்டு நிச்சயமற்ற தன்மையை பிரதிபலிக்கிறது என்பதே உண்மை. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மட்டுமல்ல; இந்திய நிறுவனங்களும் உள்நாட்டில் முதலீடு செய்வதை விட வெளிநாட்டில் முதலீடு செய்ய விரும்புவதை காட்டுகிறது" என கூறி உள்ளார்.*